# தினசரி நடப்பு நிகழ்வுகள் - 06.08.2018

## தமிழக நிகழ்வுகள்

- தேசிய செயல்முறை சார் மற்றும் பொருளாதார குழுவின் ஆய்வறிக்கையின் படி (NCAER – National Council of Applied Economic Research) அதிக முதலீடுகளை ஈர்க்கும் மாநிலங்களின் பட்டியலில் தமிழ்நாடு 6வது இடத்திலிருந்து 2வது இடத்திற்கு முன்னேறியுள்ளது.
  - இப்பட்டியலில் டெல்லி முதலிடம் பிடித்துள்ளது.

## இந்திய நிகழ்வுகள்

- முக்கிய மந்திரி கிஷான் ஆயே பதோத்திரி சோலார் யோஜனா (Mukeyamantri Kisan Aaye badhotri solar yojana) - டெல்லி யூனியன் பிரதேச அரசானது தங்கள் யூனியன் பிரதேசத்தில் உள்ள விவசாயிகளின் நிலத்தில் மூன்றில் ஒரு பங்கில் சூரிய ஒளி மின் தகடு அமைத்து மின்சாரம் உற்பத்தி செய்து தங்கள் வருமானத்தை பெருக்கிக் கொள்வதற்காக தொடங்கியுள்ளது.

- சுற்றுச் சூழல் தகவலமைப்பை பாதுகாப்பதற்கான முதல் தும்பிகளுக்கான திருவிழா (First – ever dragonfly Festival) டெல்லியில் நடைபெற உள்ளது.

- இந்தி சாகித்ய அகாதெமியின் உயரிய விருதான ஷலக்கா சம்மன் விருது (Shalaka Samman Awears) இந்தி கவிஞர் 'ஜாகித் அக்தருக்கு' வழங்கப்பட்டுள்ளது.

- ராஷ்மி ரோபோ - உலகில் முதன் முதலாக இந்தி பேசும் ரோபோ ராஷ்மி, இந்தியாவின் இராஞ்சியைச் சேர்ந்த 'ரஞ்சித் ஸ்ரீ வாட்சா' என்பவரால் உருவாக்கப்பட்டுள்ளது

## உலக நிகழ்வுகள்

- நகர்புற மேம்பாடு, புதுப்பிக்கத்தக்க எரிசக்தி ஆகிய துறைகளில் நிதி, தொழில்நுட்ப ரீதியிலான ஒத்துழைப்பு வலுப்படுத்துவது தொடர்பாக இந்தியா, ஜெர்மனி இடையே ஒப்பந்தம் கையெழுத்தாகியுள்ளது.

- பாகிஸ்தான் பாதுகாப்பு விவகாரங்களுக்காக ஆண்டுதோறும் வழங்கப்படும் $750 மில்லியன் டாலர் நிதியுதவியை குறைத்து $150 மில்லியன் டாலராக அளிப்பதற்கான தேசிய பாதுகாப்பு அதிகாரமளித்தல் சட்டம் 2019 (National Defense Authorisation Act - 2019) அமெரிக்க பாராளுமன்றம் நிறைவேற்ற உள்ளது.

- மலேசியாவில் உள்ள ஆசிய – பசுபிக் பிராந்திய ஒளிப்பரப்புதல் மேம்பாட்டு நிறுவனத்தின் (AIBD) தலைமை பொறுப்பிற்காக 'இந்தியா' இரண்டு ஆண்டுகளுக்கு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.
  - கொழும்பில் நடைபெற்ற AIBD வருடாந்திர கூட்டத்தில் இம்முடிவு எடுக்கப்பட்டுள்ளது.
  - AIBD – Asia Pacific Institute for Broadcasting Development

- உலகிலேயே அமைதியான நாடுகளின் பட்டியலில் மொத்தம் 163 நாடுகளில் இந்தியா 137வது இடம் பிடித்துள்ளது. (World Peace Index – 2018 – India 137th rant)
  - முதலிடத்தை ஐஸ்லாந்து தக்க வைத்துள்ளது. இரண்டாம் மற்றும் மூன்றாம் இடம் முறையே நியூசிலாந்து மற்றும் ஆஸ்திரியா பெற்றுள்ளது. கடைசி இடத்தில் தெற்கு சூடான் உள்ளது.

**நியமனங்கள்**

- இந்தியாவில் முதன் முறையாக ஜம்மு – காஷ்மீர் உயர்நீதிமன்றத்தின் முதல் பெண் தலைமை நீதிபதியாக 'கீதா மிட்டல்'(Gita - Mittal) என்பவர் நியமிக்கப்பட்டுள்ளார்.
    - தற்போது கீதா – மீட்டல், டெல்லி உயர் நீதிமன்றத்தின் பொறுப்பு தலைமை நீதிபதியாக பதவி வகித்து வருகிறாார்.
    - ஜம்மு – காஷ்மீர் உயர்நீதி மன்றத்தின் பொறுமை தலைமை நீதிபதியாக பதவி வகித்து வருகிறார்.
- **குறிப்பு**
    - ஜம்மு – காஷ்மீர் உயர்நீதிமன்றம், ஜனவரி 1, 1928ம் ஆண்டு ஏற்படுத்தப்பட்டது.
    - ஜம்மு, காஷ்மீர் அரசியலமைப்பு சட்டம் நவம்பர் 17, 1956ல் ஏற்றுக் கொள்ளப்பட்டு 26 ஜனவரி 1957ல் நடைமுறைப்படுத்தப்பட்டது.

- மாநிலங்களவை துணைத் தலைவர்கள் குழுவின் முதல் பெண் மாநிலங்களவை துணைத் தலைவராக 'கஹகஷான் பர்வீன்' என்பவர் நியமிக்கப்பட்டுள்ளார். இவர் பீகார் மாநிலத்தைச் சேர்ந்தவர்.

**விளையாட்டு நிகழ்வுகள்**

- இந்திய கால்பந்து அணியின் கேப்டன் சுனில் தேத்ரியின் 34-வது பிறந்த நாளையொட்டி அவரை கால்பந்து விளையாட்டிற்கான ஆசியாவின் சின்னமாக (ஐகான்) ஆசிய கால்பந்து கூட்டமைப்பு (AFC) அறிவித்துள்ளது.